Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 7.3.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 7.3.2025 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று டாமன்-டையூ மற்றும் தாத்ரா-நாகர்ஹவேலி யூனியன் பிரதேசத்தில் நமோ மருத்துவமனை உட்பட பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்தார்.

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதற்கான, ஜன் அவுஷதி திட்டம், தற்போது உலகிற்கே உணர்வூக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

ரிசர்வ் வங்கியின் ரெப்போ வட்டி விகிதம், வரவிருக்கும் நிதியாண்டில், 50 முதல் 75 சதவிகிதப் புள்ளிகள் அளவிற்கு, மேலும் குறைக்கப்படலாம் என, CRISIL அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ் உட்பட அனைத்து பிராந்திய மொழிகளின் வளர்ச்சியில், மத்திய அரசு, மிகுந்த உறுதிப்பாடு கொண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்

மோடி-குஜராத்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று டாமன்-டையூ மற்றும் தாத்ரா-நாகர்ஹவேலி யூனியன் பிரதேசத்தின் சில்வாசா நகரில், 450 படுக்கைகள் கொண்ட நமோ மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் உட்பட பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 2 ஆயிரத்து 587 கோடி ரூபாயாகும். தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை குஜராத் மாநிலம் சூரத்தில், அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு வழங்குவதற்கான இயக்கத்தை தொடக்கி வைக்கிறார். 2 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு, **கரீப் கல்யாண் அன்ன யோஜனா** திட்டப் பலன்களை அவர் வழங்குகிறார். உணவுப் பாதுகாப்பு சட்டப் பயனாளிகளுக்கு கூடுதல் உணவு தானியங்களை இலவசமாக வழங்குவதற்கான பிரதமரின் **கரீப் கல்யாண் அன்ன யோஜனா** திட்டத்தில், குஜராத் அரசால் சேர்க்கப்பட்டுள்ள, வேறு பல சமூக நலத் திட்டங்களின் பயனாளிகள், இதில் அடங்குவர். சர்வதேச மகளிர் தினமான நாளை, குஜராத் மாநிலம் நவ்சாரியில் நடைபெறும், லட்சாதிபதி சகோதரிகள் மாநாட்டிலும், பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொண்டு, சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த இரண்டரை லட்சம் பெண்களுக்கு, மொத்தம் 450 கோடி ரூபாய் நிதி உதவிகளை வழங்குகிறார்.

*ஜன் அவுஷதி-மோடி*

மக்களுக்குத் தேவையான மருந்துகளை, தரமாகவும், மலிவான விலையிலும் வழங்குவதன் மூலம் **ஆரோக்கியமான இந்தியாவை** உருவாக்குவதற்கான, **ஜன் அவுஷதி** திட்டம், தற்போது உலகிற்கே உணர்வூக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். கோடிக் கணக்கிலான இந்தியக் குடும்பங்கள், மருத்துவத் தேவைகளுக்காக செலவிடும் பணம், இத்திட்டத்தினால், பெருமளவில் சேமிக்கப்படுவதாக, இன்று, **ஜன் அவுஷதி தினத்தை** ஒட்டி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் பிரதமர் கூறி உள்ளார். நாட்டில் தற்போது **இருதய சிகிச்சைக்கான செலவு**, முன் எப்போதும் இல்லாத அளவில் குறைந்து இருப்பதாகவும், **மூட்டு மாற்று அறுவை சிகிச்சை** மலிவாகி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பிரதமரின் **தேசிய டயாலிசிஸ்** திட்டத்தினால், சிறுநீரக நோயாளிகள், மிகுந்த பயன் பெறுவதாகவும், மக்கள் மருந்தகத்தில், வெறும் 1 ரூபாய் விலையில் **சானிடரி நாப்கின்** விற்க்கப்படுவதால், பெண்களிடையே, **மாதவிடாய்க் கால சுகாதாரம்** பரவலாகி இருப்பதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்

*ஜன் அவுஷதி-அமைச்சர்*

பிரதமரின் **ஜன் அவுஷதி** திட்டம் சுகாதாரத் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பதாக, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே பி நட்டா கூறி உள்ளார். நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 15

ஆயிரம் ஜன் அவுஷதி மருந்து விற்பனை நிலையங்களால், அன்றாடம் கோடிக் கணக்கிலான மக்கள் பயன்பெற்று வருவதாக, இன்று ஜன் அவுஷதி தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் கூறி உள்ளார். ஆரோக்கியமான இந்தியா ஒன்றை உருவாக்குவதில் அரசுக்குள்ள உறுதிப்பாட்டை அனைவரும் கொண்டாடுவதற்கான தருணம் இது என்றும் அவர் கூறி உள்ளார். சுகாதாரத் துறையில் வரப் பிரசாதமாகத் திகழும், ஜன் அவுஷதி என்னும் மக்கள் மருந்தகத் திட்டத்தினால், கோடிக் கணக்கிலான மக்களின் வாழ்க்கை மேம்பட்டுள்ளதாக, மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம்

2023-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து, 6.5 சதவிகிதமாக ஒரே அளவில் பராமரிக்கப்பட்ட, ரிசர்வ் வங்கியின் ரெப்போ வட்டி விகிதம் வரவிருக்கும் புதிய நிதியாண்டில், 50 முதல் 75 சதவிகிதப் புள்ளிகள் அளவிற்கு, மேலும் குறைக்கப்படலாம் என, கடன் தீர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கான, CRISIL நிறுவனம் தெரிவித்துள்ளது. மக்களிடையே நுகர்வு அதிகரித்து, கடன்கள் மீதான வட்டி விகிதம் குறைய இதனால் ஏதுவாகும் என்று, வரவிருக்கும் நிதியாண்டிற்கான CRISIL நிறுவனத்தின், முன்நோக்கு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி, குறையும் போக்கில் இருந்து மீண்டு,

நடப்பு நிதியாண்டின் 3-ஆவது காலாண்டில், 6.2 சதவிகிதமாக அதிகரித்துள்ள நிலையில், வரவிருக்கும் நிதியாண்டிலும், வளர்ச்சி விகிதம் ஸ்திரமாகவே நீடிக்கும் என, அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*மகளிர் தினம்*

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி, **தேசிய மகளிர் ஆணையம்** நாளை புதுடெல்லியில், **அகில இந்திய பெண் வழக்கறிஞர்கள்** மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது. மறுமலர்ச்சி இந்தியாவில் பெண்களின் பங்கை அதிகரிப்பதற்கான உத்திகள் குறித்து, இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும் என்று தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி விஜயா ராஹத்கர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். **அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின்** ஆதரவுடன் கூடிய, இந்த 2 நாள் மாநாட்டில் நாடெங்கிலும் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்க உள்ளனர்.

*மகளிர் தினம்*

புதுச்சேரியில், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை சார்பில் கரிக்கலாம்பாக்கத்தில் நாளை நடைபெற உள்ள சர்வதேச மகளிர் தின விழாவை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைக்கிறார். முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மகளிர்

மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமி காந்தன், மற்றும் தலைமைச் செயலர் உள்ளிட்ட உயர் நிலை அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.

*அமித் ஷா*

தமிழ் உட்பட அனைத்து பிராந்திய மொழிகளின் வளர்ச்சியில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மிகுந்த உறுதிப்பாடு கொண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று ராணிப்பேட்டை அருகே தக்கோலத்தில், மத்திய தொழிலக பாதுகாப்பு படையின் 56-ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், இந்திய கலாச்சாரத்தின் விலைமதிப்பற்ற ஆபரணமாகத் திகழும் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை கவுரவிக்க, பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். தமிழகத்தில் பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகள் தமிழில் கற்பிக்கப்பட வேண்டும் என்பதே தமது எண்ணம் என்றும் இதனால் தமிழ் மக்களின் வேர்கள் வலுப்பட்டு இத்துறைகளில் சம வாய்ப்பு கிடைக்க ஏதுவாகும் என்றும் அவர் கூறினார். மத்திய உள்துறை அமைச்சரின் உரையில் இடம் பெற்ற மேலும் சில முக்கிய அம்சங்கள்..........................

(வாய்ஸ்)

நாட்டின் முக்கிய தொழில் நிறுவனங்களுக்கும், கோடிக் கணக்கிலான ரயில் மற்றும் விமான பயணிகளுக்கும், தொழிலக பாதுகாப்பு படையினர், பாதுகாப்பு அளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்தார். 250 துறைமுகங்களும், தொழிலக பாதுகாப்பு படை மூலமான பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்படும் என அவர் கூறினார். தொழிலக பாதுகாப்பு படையினருக்கு பல்வேறு நவீன வசதிகள் வழங்கப் பட்டுள்ளதாகவும், இவர்களின் உடல் மற்றும் மனநல பராமரிப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக தொழிலக பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பை, அமைச்சர் திரு அமித் ஷா பார்வையிட்டு, பணியின் போது உயிர் தியாகம் செய்த, CISF வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். தொழிலக பாதுகாப்பு படையினரின் பணிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மேற்கு வங்கம் மற்றும் குஜராத்தில் இருந்து கன்னியாகுமரி வரை நடைபெறும் கடலோர சைக்கிளோத்தான் பயணத்தையும், மெய்நிகர் முறையில் உள்துறை அமைச்சர் தொடக்கி வைத்தார்.

மத்திய தகவல் - ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் உட்பட பலர், விழாவில் கலந்து கொண்டனர்.

*ஸ்டாலின்*

தமிழக முதலமைச்சர் திரு முக ஸ்டாலின் இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து, மொத்தம் 71 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் 10 புதிய திட்டப் பணிகளை காணொளி காட்சி மூலம் தொடக்கி வைத்தார். சென்னை நகர ஆட்டோக்களில், பெண்களின் பாதுகாப்பிற்கான QR Code பொருத்துவதற்கான, பெருநகர காவல்துறையின் திட்டத்தையும் அவர் தொடக்கி வைத்தார். சோழிங்க நல்லுரில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உயர்தர மின் மேலாண்மை மையம் அமைக்கும் பணிகளுக்கும் தமிழக முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார். இதனால் 500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

*கைலாஷ்நாதன்*

உலக கண் அழுத்த நோய் விழிப்புணர்வு வாரத்தை ஒட்டி, புதுச்சேரியில் கண் மருத்துவர் சங்கம் மற்றும் ரோட்டரி சங்கம் சார்பில் காந்தி திடலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் பரிசோதனை முகாமை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாலை தொடக்கி வைத்து பார்வையிட்டார். நிகழ்ச்சியில், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி, மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஏராளமான பொது மக்கள் இம்முகாமில் கண் பரிசோதனை செய்து கொண்டனர். துணை நிலை ஆளுநர்

திரு கைலாஷ்நாதன் இன்று மாலை கடற்கரை சாலை காந்தி திடலில் புதுச்சேரி காவல்துறையின்  திட்டத்தையும் தொடக்கி வைக்கிறார்.

*நாராயணசாமி*

புதுச்சேரியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் நடத்தி வரும் போராட்டங்களையும், அவர்களின் கோரிக்கைகளையும், அரசு கண்டு கொள்ளவில்லை என, முன்னாள் முதலமைச்சர் திரு வி நாராயணசாமி குற்றம் சாட்டி உள்ளார்.  இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொகுதி மறுசீரமைப்பு மற்றும் மும்மொழிக் கொள்கையை, மத்திய அரசு புதுச்சேரி மீது திணிப்பதாகவும், மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி அடுத்து வந்தால், மும்மொழிக் கொள்கை நீக்கப்படும் என்றும் கூறினார். துணை நிலை ஆளுநர், தமது அதிகாரங்களுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்றும் திரு வி நாராயணசாமி வலியுறுத்தினார்.

*விபத்து*

திருத்தணி-சோளிங்கர் நெடுஞ்சாலையில் இன்று, டிப்பர் லாரி, அரசு பேருந்து மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில், 5 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயம் அடைந்து திருத்தணி மற்றும் அருகாமை மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

*வானிலை*

வரும் 9-ஆம் தேதி வரை தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை, ஒரு சில இடங்களில் இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கும்

என்றும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களில், இயல்பை விட 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக, வெப்பநிலை பதிவாகலாம் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 10-ஆம் தேதி கடலோர தமிழகம், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், 11-ஆம் தேதி நெல்லை, குமரி. தென்காசி உள்ளிட்ட 6 தென் மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீனவர்கள் கைது*

பாம்பன் பகுதியைச் சேர்ந்த 14 தமிழக மீனவர்களை, நேற்று இரவு இலங்கை கடற்படையினர் கைது செய்து, விசாரணைக்காக, இலங்கையின் மன்னார் கடற்படைத் தளத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். ஏற்கனவே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் அந்நாட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட25 தமிழக மீனவர்கள் அண்மையில் தாயகம் திரும்பிய நிலையில், கைது நடவடிக்கை மீண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று டாமன்-டையூ மற்றும் தாத்ரா-நாகர்ஹவேலி யூனியன் பிரதேசத்தில் நமோ மருத்துவமனை உட்பட பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்தார்.

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதற்கான, ஜன் அவுஷதி திட்டம், தற்போது உலகிற்கே உணர்வூக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

ரிசர்வ் வங்கியின் ரெப்போ வட்டி விகிதம், வரவிருக்கும் நிதியாண்டில், 50 முதல் 75 சதவிகிதப் புள்ளிகள் அளவிற்கு, மேலும் குறைக்கப்படலாம் என, CRISIL அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ் உட்பட அனைத்து பிராந்திய மொழிகளின் வளர்ச்சியில், மத்திய அரசு, மிகுந்த உறுதிப்பாடு கொண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 7.3.2025/Script.

-------------------------------